# The Influence of Landlords and The Struggles of Tribal People in Lakshmi Saravanakumar's Novels

**J. Sharafin**
*Reg.no : 22213154021018, Department of Tamil*
*S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. N. Nisha Navis**
*Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniyam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255932

**Abstract**

*Lakshmi Saravanakumar easily presents the class divisions that exist in society through the stories of landlords and tribals. In these novels, he has highlighted the tribals and their life problems. His novels portray the tribal people as the slave classes and the landlords as the dominant classes. These novels reflect social class divisions and economic inequalities. Marginalized people, who are seen as communities that are alienated from mainstream society, are subjected to many hardships by the ruling classes. The ruling classes are creating changes in the lives of marginalized people and bringing them under their control. Their influence is also penetrating tribal communities with tight cultural ties. Tribal communities traditionally hold festivals when problems arise in their environments, thereby reviving the community. Changes in a community's language, religion, and culture lead to a loss of trust among the community members. There is a belief among the Paliyar people that every Paliyar is sent by the Palichi god to protect the forests. There are many wealthy people in society who plunder nature. Their economic and political advancement leads to the enslavement of marginalized people. There is a dawn for all enslaved people. The dawn of freedom must arise from within them. The struggle is necessary to put an end to the suffering they have endured. Hunting is the basic livelihood of tribal people. It is a way to fulfill the food requirement. The basic livelihood of the common people is seen as a source of entertainment and a platform for the ruling class, such as the landlords and farmers. The freedom and economic progress of tribal people are hindered as their lands are taken under the control of landlords. Tribal farmers lose their land rights and become slaves. This research article examines the lifestyle of the landlords, their livelihood impacts on the tribals, and the resurgence of the tribals.*

***Keywords:*** *Tribals, Landlords, Oppression, Marginalized People, Exploits, Resurgence*

**References**

1. Rasamanikkanar, Ma., History of Tamil Nadu and Tamil Culture, Tamil Development Department, Chennai - 600 008.
2. Bhaktavatsala Bharathi, Tribal Communities of Tamil Nadu, Adaiyalam Press, 1205/1, Karur Road, Pudukkottai - 621 310.
3. Bhaktavatsala Bharathi, Anthropological Theories, Adaiyalam Press, 1205/1, Karur Road, Pudukkottai - 621 310.

4. Lakshmi Saravanakumar, Vettai (The Hunt), Zero Degree Publication, 55(7), R-Block, 6th Avenue, Anna Nagar, Chennai - 600 040.
5. Lakshmi Saravanakumar, Kanagan (Forest Dweller), Zero Degree Publication, 55(7), R-Block, 6th Avenue, Anna Nagar, Chennai - 600 040.
6. Lakshmi Saravanakumar, Panri Vettai (Wild Boar Hunt), Zero Degree Publication, 55(7), R-Block, 6th Avenue, Anna Nagar, Chennai - 600 040.
7. Vincent Raj, Mettukudikal (Hill Tribes), NCBH, 40A, Alangulam, Karangadu. K.K. Pillai, History of Tamil Nadu: People and Culture, World Tamil Research Institute, Second Main Road, Central Polytechnic Campus, Taramani, Chennai.
8. John Kennedy, Summer Hill Tribes, Mugil Publications, Ideas Center, 26-A, Vazhaithopu, Chinthamani Road, Madurai.
9. Sheraphin, J., Cultural Characteristics and Changes of Tribal People in Lakshmi Saravanakumar's Fiction, Tamil Language and Literature International Research Journal, Volume 7, Special Issue - 2, February 2025, E&ISSN: 2581-7140.

# லஷ்மி சரவணகுமார் நாவல்களில் ஜமீன்தார்களின் தாக்கங்களும் பழங்குடி மக்களின் வாழ்வியல் போராட்டங்களும்

***ஜெ. ஷெராபின்***
பதிவுஎண்:22213154021018, தமிழ்த்துறை
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***நே. நிஷாநேவிஸ்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுசுருக்கம்***
*சமூகத்தில் நிலவும் வர்க்க பிரிவினைகளை லஷ்மி சரவணகுமார் தனது புனைகதைகளில் ஜமீன்தார்கள் மற்றும் பழங்குடிகள் மூலம் எளிதாக முன்வைக்கிறார். இந்நாவல்களில் பழங்குடிகள் பற்றியும் அவர்களது வாழ்வியல் சிக்கல்கள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இவரது நாவல்கள் அடிமை வர்க்கங்களாக பழங்குடி மக்களையும் ஆதிக்க வர்க்கங்களாக ஜமீன்தார்களையும் முன்னிறுத்துகின்றது. சமுதாய வர்க்க பிரிவினைகளையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் இந்நாவல்கள் பிரதிபலிக்கின்றன. அடிப்படை சமூகத்தில் இருந்து விலகிய சமூகங்களாக காணப்படும் விளிம்பு நிலை மக்கள் அதிகார வர்க்கங்களால் பல இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். விளிம்பு நிலை மக்களது வாழ்வியலில் மாற்றங்களை உருவாக்கி அதிகார வர்க்கங்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைக்கின்றனர். இறுக்கமான பண்பாட்டுப் பிணைவுகள் கொண்ட பழங்குடி சமூகத்தினர் மீதும் இவர்களது ஆதிக்கம் ஊடுறுவுகிறது. பழங்குடி சமூகங்கள் தங்கள் சூழல்களில் சிக்கல்கள் ஏற்படும் போது பாரம்பரிய முறைப்படி திருவிழாக்கள் நடத்துகின்றனர். இதன் மூலம் மீண்டும் சமூகத்தை புதுப்பித்துக் கொள்கின்றனர். ஒரு சமூகத்தின் மொழி, தெய்வம் மற்றும் பண்பாடு இவற்றின் மாறுதல்கள் சமூக மக்களிடையே நம்பிக்கை இழக்க செய்கிறது. காடு களை பாதுகாக்க ஒவ்வொரு பளியர் இனத்தவரும் பளிச்சியால் அனுப்பப்படுகிறார்கள் என்ற நம்பிக்கை பளியரின மக்களிடையே காணப்படுகிறது. இயற்கையை கொள்ளையடித்து சமூகத்தில் பல செல்வந்தர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் பொருளாதார மற்றும் அரசியல் மேம்பாடு விளிம்பு நிலை மக்களை அடிமைப்படுத்த வழிவகை செய்கிறது. அனைத்து அடிமை நிலை மக்களுக்கும் விடியல் என்பது உண்டு. சுதந்திர விடியல் அவர்களிடம்இருந்து தோன்றியாக வேண்டும். தாங்கள் அனுபவிக்கும் இன்னல்களுக்கு முற்றுப்புள்ளியிட எதிர்ப்பு போராட்டங்கள் அவசியமானது. வேட்டை என்பது பழங்குடி மக்களது அடிப்படை வாழ்வியல். உணவு தேவையை பூர்த்தி செய்யும் ஒரு வழிக்கோலி. பாமரர்களது அடிப்படை வாழ்வியல் ஜமீன்கள் மற்றும் பண்ணையார்கள் போன்ற அதிகார வர்க்கத்திற்கு பொழுது போக்காகவும் கௌரவத்தை வெளிக்காட்டும் களங்களாகவும் காணப்படுகிறது. பழங்குடி மக்களின் வாழிடங்கள் ஜமீன் கட்டுப்பாட்டுக்குள்ளாகப் பட்டதால் பழங்குடி மக்களின் சுதந்திரம் மற்றும் பொருளாதார முற்போக்குநிலை தடைபடுகிறது. பழங்குடி விவசாயிகள் நில உரிமை இழந்து அடிமைகளாகின்றனர். இவ்வாய்வு கட்டுரையில் ஜமீன்தார்களின் வாழ்க்கை முறையையும் அவர்கள் பழங்குடிகள் மீது ஏற்படுத்தும் வாழ்வாதார தாக்கங்களையும்மற்றும் பழங்குடிகளின் மீள் எழுச்சியையும் காணலாம்.*

***குறிப்புச் சொற்கள்:*** *பழங்குடியினர், நிலப்பிரபுக்கள், அடக்குமுறை, விளிம்புநிலைமக்கள், சுரண்டல்கள், மறுமலர்ச்சி*

**முன்னுரை**

உலகின் பொருளாதார சுழற்சிஉழைக்கும் வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. உழைப்பினால் மட்டுமே உலகம் இயங்குகிறது. உழைக்கும் வர்க்கத்தை முதலாளி வர்க்கம் ஒரு கட்டமைப்பிற்குள் அடக்குகிறது. இதனுள் வேலை நேரம், ஊதியம், பணி செய்யும் முறை, உயர் பதவி வகிப்பவர்களுக்கான மரியாதை போன்றவை அடங்கும். இந்த கட்டமைப்பு முதலாளிகள் முன்னேற்றத்திற்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். லஷ்மி சரவணகுமார் கானகன், பன்றி வேட்டை ஆகிய நாவல்களில் சமூகத்தில் நிகழும் வர்க்க வேறுபாடுகளை பழங்குடி மக்களையும் ஜமீன்தார்களையும் உருவகமாக்கி வெளிக்கொணர்ந்துள்ளார். ஜமீன்தார்கள் அதிகாரத்தை ஆயுதமாகக் கொண்டு காடுகள் மீதும் காடுகளை வாழ்விடமாகக் கொண்ட மரங்கள், விலங்குகள் மற்றும் கிராமபுற மக்கள் மீதும் வன்முறைகளை கட்டவிழ்க்கின்றனர். பாமர மக்கள் தங்களது எதிர்ப்புகளை செல்வந்தர்களுக்கும், அதிகார வர்க்கங்களுக்கும் எதிராக காட்டுவது எளிதல்ல. இத்தகைய வன்முறைகள் சூழலியல்சமநிலை மற்றும் தனிமனித சுதந்திரத்தை மீறுவதாக காணப்படுகிறது. இருப்பினும் காலப்போக்கில் புதியதொரு மாற்றத்தை தேடி இளம் தலைமுறை தனது எதிர்ப்பை முன்வைக்கிறது. பழங்குடி மக்கள் எதிர் கொண்ட வாழ்வியல் சிக்கல்களையும் ஜமீன்தார்களது சுரண்டல்களையும் மற்றும் பழங்குடிகளது எதிர்வினைகளையும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது..

**ஜமீன்தார்கள்**

ஜமீன்தார் என்ற சொல் பெர்ஷிய மொழியிலிருந்து தோன்றியது ஆகும். ஜமீன் என்றால் நிலம் என்றும் தார் என்றால் வைத்திருப்பவர் என்றும் பொருள்படுகிறது. அதாவது நிலத்தை வைத்திருப்பவரை ஜமீன்தார் என்று அழைக்கின்றனர். இந்தியாவில் முதன்முதலில் முகலாய ஆட்சி காலத்தில் ஜமீன்தார் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. முகலாயர்களுக்கும் நாயக்கர்களுக்கும் நிலவரி வசூலித்து கொடுப்பவர்களாக ஜமீன்தார்கள் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் மக்கள் வசிக்கும் மற்றும் விவசாயம் செய்யும் நிலங்களுக்கான வரிகளை வசூலித்து அரசிடம் ஒப்படைத்தனர். இவர்கள் ஆங்கிலேயர்களுக்காக வரி வசூலித்ததோடு தங்கள் பகுதிகளில் சிற்றரசர்களை போலவே ஆட்சி செய்தனர். குடிமக்களின் வளர்ச்சியில் கவனம் கொள்ளாத நில பிரபுக்களின் வாழ்க்கை முறையை டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தனது நூலில், நிலவரித்தண்டுவதற்காகவே நாயக்க மன்னர்களாலும் ஆங்கிலேயராலும் நியமிக்கப்பட்ட ஜமீன்தார்களும் ஜாகீர்தாரர்களும் தாமும் முடிசூடிய மன்னர்களைப் போலவே நாடாண்டு அளவற்ற பகட்டிலும் ஆடம்பரத்திலும் வாழ்க்கையை போக்கி வந்தனர். (தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் பக்.520) என்று குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை இவர்களது பணி தொடர்ந்தது. ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் **1793** ஆம் ஆண்டு நிரந்தர தீர்வு சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி நிலத்தின் முழு உரிமையும் ஜமிந்தார்களுக்கு கொடுக்கப்பட்டது. மன்னராட்சி காலத்தில் பாளையக்காரர்களாக இருந்தவர்கள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் ஜமீன்தார்களாக உருபெற்றனர். தமிழகத்தில் கடலூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், ராமநாதபுரம் போன்ற பகுதிகளில் அதிகமாக ஜமீன் குடும்பங்கள் காணப்பட்டன.

**பழங்குடிகள் வாழ்வியல்**

காடுகளையும் மலைகளையும் தங்கள் பூர்வீகமாகக் கொண்டு பழங்கால வாழ்வியல் முறைகளை பின்பற்றி வாழ்பவர்கள் பழங்குடி மக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பழங்குடி சமூகங்கள் பொதுவுடமை

சமூகங்களாக காணப்படுகின்றன. இவர்களிடையே பகிர்ந்து உண்ணுதல் போன்ற பண்புகள் காணப்படுகிறது. மூதாதையர்கள் கட்டமைத்த பண்பாடுகளை, விதிகளை மீறாதவர்களாக காணப்படுகின்றனர். இவர்களது வாழ்வு இயந்திரங்கள் ஏதுமின்றி இயற்கையால் கட்டமைக்கப்பட்டுள்ளது. தங்கள் முன்னோர்கள் வழிபட்ட தெய்வங்களையும் வன தேவதைகளையும் வழிபடுகின்றனர். இவர்கள் தங்களது அடிப்படைத் தேவைகளுக்காக வேட்டையாடுதல் தேன் எடுத்தல் தினை பயிரிடுதல் போன்ற சிறு விவசாய முறைகளையும் பின்பற்றுகின்றனர். எளிமையான ஆடை அமைப்புகளையும் பாறை புடவுகளை தங்களது வாழிடமாகவும் கொண்டுள்ளனர். இவர்களது வாழ்வியல் பெரும்பாலும் வெளி உலகை சாராமல் காணப்படுகிறது. வெளி உலக மனிதர்களோடு உறவு கலப்பின்றி வாழ்ந்தனர்.

பழங்குடி மக்களின் வாழ்வியல் தனித்துவமானது. பிற சமூக மக்களின் தொடர்பில்லாமல் வாழும் தகவமைப்பைப் பெற்றவர்கள். தங்களுக்கான ஆடைகளை தங்களுக்கு ஏற்றாற் போல் உருவாக்கிக் கொள்கின்றனர். உணவுகளை தாங்களே தேடிக் கொள்கின்றனர்.

(தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்.பக்.698)

தங்களது பூர்வீக இடங்களில் ஜமீன்தார்கள் போன்ற சமவெளி மனிதர்களால் ஏற்படும் சூழலியல் மாற்றங்களால் பல வாழ்வியல் மாற்றங்களை சந்திக்கின்றனர். ஆடை உடுத்துதல் உணவு பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. வனத்தில் வாழும் அச்சுறுத்தும் விலங்குகளை தெய்வங்களாக வழிபடுகின்றனர். காட்டிற்கு உயிர் இருப்பதாகவும் காடுகளை அழிப்பவர்களை இயற்கை தண்டிப்பதாகவும் நம்புகின்றனர். உணவிற்கான சமநிலை ஏற்படாத போது வேட்டையாடுதலை கையாள்கின்றனர். வேட்டைக்கென்றும் சில வரைமுறைகள் பழங்குடிமக்களிடம் காணப்படுகிறது. உணவு தேவைகளுக்காக மட்டுமே வேட்டையாடுகின்றனர். தாய்மை விலங்குகளை வேட்டையாடுதல் கன்று விலங்குகளை வேட்டையாடுதல் போன்றவற்றை தவிர்த்தனர். தங்கள் தெய்வங்களுக்கு பூசையிட்ட பின்பு வேட்டைகளை தொடங்கினார். இறைச்சிகளை உண்டனர். விலங்குகளின் இனவிருத்தி காலங்கள் பழங்குடி மக்களால் அறியப்பட்டிருந்தது. இதனால் இவர்களது வேட்டை, சூழலியல் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. குழந்தை பெற்றெடுத்தல், மருத்துவம் போன்றவற்றிற்கு இயற்கைசார் முறையை பயன்படுத்துகின்றனர். இத்தகைய வாழ்வியல் முறைகள் காலம் தோறும் பழங்குடிகளது தலைமுறைக்கு கடத்தப்படுகிறது.

**நாவல்களில் ஜமீன்தார்கள் சித்தரிப்பு**

லஷ்மி சரவணகுமார் தனது கானகன், பன்றி வேட்டை ஆகிய நாவல்களில் ஜமீன்களை பற்றியும் அவர்களது வாழ்வியல் முறைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். காடுகள் மீதான பிரமிப்பினாலும், செல்வ செழிப்பிற்கு காரணியான காட்டுவளங்கள் அபகரிப்பிற்காகவும் ஜமீன்தார்கள் காடுகளுக்குள் நுழைகின்றனர். பழங்குடி மக்கள் மீது தங்களது ஆட்சியை செலுத்தவும் வீர பெருமைகளை வேட்டைகள் மூலம் நிலை நிறுத்தவும் காடுகளை பயன்படுத்துகின்றனர். தங்களது பாதுகாப்பிற்காகவும் வேட்டைக்காகவும் உயரமான நாய்களை வளர்க்கின்றனர். தங்களிடமுள்ள அரசியல் செல்வாக்குகள் மற்றும் பொருளாதார செழிப்புகளை பயன்படுத்தி பழங்குடி மக்களை அடிமைப்படுத்துகின்றனர். குறைந்த ஊதியத்தில் அதிக வேலை மூலம் பழங்குடி மக்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. வட்டிக்கு பணம் கொடுத்தல், தங்கள் கட்டுபாட்டிலுள்ள நிலங்களை குத்தகைக்கு கொடுத்தல் மூலம் பழங்குடி மக்களின் செல்வங்களை

சுரண்டுகின்றனர். அரசுகளும் சட்டங்களும் சில சமயங்களில் உயர்வர்க்கத்தின் பக்கம் சாய்வதாக நாவல் ஆசிரியர் சித்தரிக்கின்றார். ஜமீன்தார்கள் அதிகமான மது பழக்கத்திற்கு அடிமையாகின்றனர். தங்களது கௌரவத்திற்காக விலங்குகள் மீது வேட்டைகளை வரையறையின்றி நிகழ்த்துகின்றனர். இத்தகையவன் முறையின் தொடர்ச்சி பழங்குடி மக்கள் மீதும் கட்ட விழ்க்கப்படுகிறது. தனக்கு கிடைக்கும் வணக்கத்திலும் பணிவிலும் முதலாளி வர்க்கம் ஒரு வகை போதையை கண்டுகொள்கிறது. எனவே தனக்கான மரியாதையை மக்கள் கொடுக்க வேண்டும் என நாவல்களில் புனையப்பட்டுள்ள ஜமீன்தார் கதாபாத்திரங்கள் எதிர்பார்க்கின்றன. இதனை லஷ்மி சரவணகுமார் தனது பன்றி வேட்டை நாவலில்,

"எப்பா காட்டுக்குப் போறதுன்னா அப்படியே போயிருக்கலாம், எதுக்கு ஊருக்குள்ள வர சொன்னிய? என கேட்க..... முதியவர் ஒருவர் குனிந்து நின்று ஜமீனுக்கும் அவர் வண்டிக்கும் கும்பிடு போட்டார். இதுக்கு தாண்டா இந்த கும்பிடுக்கு தான் இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு இந்த தயோலிக கும்புடு போட்றது பாக்க முடியாதுல்ல அதான் போறதுக்கு முன்னாடி பார்த்துக்கிடலாம்னு நெனச்சேன் (பன்றி வேட்டை பக்19) என்று குறிப்பிட்டுள்ளார். ஜமீனுடன் பயணிக்கும் அரக்கத்தன்மை கொண்ட பொருட்களாக சித்தரிக்கப்பட்டுள்ள துப்பாக்கி, சாட்டை மற்றும் வேட்டை நாய்கள் போன்ற வைபயத்தை ஏற்படுத்தி பணிவை பெற்றுக் கொடுக்கிறது.

### இயற்கை மீதான ஜமீன்தார் சுரண்டல்கள்

தங்களை மேல்குடி மக்களாக கருதும் ஜமீன்தார்கள் இயற்கையை அழித்து தங்கள் வளங்களை பெருக்கிக் கொள்கின்றனர். காடுகளையும் மலைகளையும் விளைச்சலுக்கு ஏற்ற விளைநிலங்களாக மாற்றிக் கொண்டனர். சிற்றோடைகளையும் ஊற்றுக்களையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு தங்களது தேவைகளை மட்டும் பூர்த்தி செய்கின்றனர். இதனால் காட்டு விலங்குகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. மரங்களை வெட்டி வணிகம் செய்கின்றன. அண்டை மாவட்டங்களுக்கும் மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்கின்றன. இயற்கை தனக்கு தேவையானதை தானே தயாரிப்பதோடு தன்னை சார்ந்தவருக்கும் உணவை உருவாக்கிக் கொடுக்கிறது. இதனால் ஒட்டு மொத்த வனவிலங்குகளும் பாதிக்கப்படுகின்றன. குட்டி யானைகளுக்கு உணவளிக்க முடியாத துயரம் தாய்யானைகளுக்கு ஏற்படுகிறது. இதே அவலநிலை பிற விலங்குகளுக்கும் ஏற்படுகிறது. மனிதர்கள் நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் வாழ்வியல் நடைமுறைகளை எளிதில் மாற்றிக் கொள்கின்றனர். ஜமீன்தார்கள் பார்வையில் காடுகள் வேடிக்கைக்கான களங்களாக காணப்படுகிறன. காடுகளில் உள்ள பாறைகளை உடைத்து வணிகம் செய்கின்றனர். மலைகளைமுகட்டின் அடிபரப்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சமவெளியாக்குகின்றனர். காட்டின் அவல நிலையை லஷ்மி சரவணகுமார் தனது கானகன் நாவலில்,

காடு இப்பொழுது அவர்களின் (பழங் குடிகளின்) காடாய் இல்லை. காட்டின் அடிவயிறு வரையிலும் குடைந்து செல்லும் வெறியோடு சமவெளி பகுதிகளில் இருந்து விவசாயிகளும் பெரும் பெரும் முதலாளிகளும் படையெடுத்து வருகின்றனர். இந்த பகுதியில் ஆண்டாண்டு காலமாய் வளர்ந்து கிடந்த முதிய மரங்களை எல்லாம் வெட்டி மலைக்கு அந்தப் பக்கம் இருக்கும் மலையாள நாட்டிற்கு எடுத்துப் போகிறார்கள்.

(கானகன்பக்.25)

என்று குறிப்பிட்டுள்ளார்.

### பழங்குடிகள் மீதான அடக்குமுறை

விளிம்புநிலை மக்கள் வாழ்வியல் என்பது போராட்டங்கள் சார்ந்தது. அதிகார வர்க்கங்கள் வன்முறைகள் மற்றும் அடக்கு

முறைகள் மூலம் விளிம்பு நிலையிலிருந்து நடுத்தரத்திற்கு முன்னேற முயற்சிக்கும் சமூகத்தினரது கனவுகளை முடக்குகின்றனர். அதிகாரவர்க்கங்களின் கைக்குள் பழங்குடி மக்களின் வாழ்க்கை கைக்குட்டையாய் அடங்கிப் போகிறது. ஜமின்தார்களின் அடக்குமுறைக்கு பழகிபோகிறது பழங்குடி இனம். பழங்கால மனிதன் இயற்கையை சார்ந்து வாழ்ந்தான். காலப் போக்கில் சமவெளி மனிதர்கள் ஏற்படுத்திய சூழலியல் மாற்றங்களால் உழைக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகிறனர். இதனைகி.வின்சென்ட்ராஜ்தனதுமேட்டுக் குடிகள் நூலில்,

மனித குலம் பெருகிய காரணத்தால் அல்லது இயற்கையின் மாறுதலால் அவனுக்கு போதிய உணவு இயற்கையிலிருந்து இனமாக கிடைக்கவில்லை. எனவே துன்பப்பட்டு உழைத்து பராமரித்து சேகரித்து பாதுகாத்து உண்ண வேண்டியதாயிற்று.

(மேட்டுக்குடிகள் பக்.238)

என்று குறிப்பிட்டுள்ளார். சமவெளி பகுதிகளை பூர்விகமாகக் கொண்ட ஜமீன்தார்கள் காட்டில் மன்னர்களாய் வாழ்ந்தவர்களின் பூர்வீக நிலங்களை தங்கள் வசமாக்கிக் கொண்டனர். தங்கள் தோட்டங்களுக்கு பழங்குடி மக்களை கூலித் தொழிலாளிகளாக்கினர். நிலங்கள் ஜமீன்தார்கள் கைவசமானதால் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பழங்குடிமக்களுக்கு ஏற்படுகிறது. இதனால் பருத்தி தோட்டங்கள், தேயிலை தோட்டங்கள் போன்ற பணப்பயிர் தோட்டங்களில் பணியமர்த்தப்பட்டனர். ஜமீன்தார்கள் கொடுக்கும் ஊதியம் பழங்குடி மக்களின் அன்றாட தேவைகளை கூட பூர்த்தி செய்வதாக இல்லை. முதலாளி வர்க்கங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியங்கள் கொடுப்பதால் அதிகளவில் லாபம் ஈட்டுகின்றனர். தொழிலாளர்களும் தங்களது ஊதியத்தை தாண்டி எதையும் சிந்திக்க இயலாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஜமீன்தார்கள் பழங்குடி மக்களை தங்களது காலடியில் வைத்துக் கொள்வதற்காக பாலியல் தீண்டல்களை கொடுக்கின்றனர். அவர்களை மனதளவில் தாழ்வடைய செய்கின்றனர். மேலும் அவர்களது தலைமுடிகளை வெட்டி தங்களது அதிகார செயல்பாடுகளை வெளியுலகிற்கு காட்டி பயத்தை அதிகரிக்க செய்கின்றனர். செய்யாத தவறுகளுக்கும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. தண்டனைகள் கொடுமையானதாகவும் கடுமையானதாகவும் காணப்படுகின்றன. இதனை லஷ்மி சரவணகுமார் தனது பன்றி வேட்டை நாவலில்

மயக்கம் தெளிந்து எழுந்த போது பழனியின் தலை மொட்டை அடிக்கப்பட்டிருந்தது. அவனது தலையில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையின் மேல் ஏற்றினார்கள். அவனது கைகள் கட்டப்பட்டிருந்தன. ஜமீனின் வேலை ஆட்கள் கழுதையின் மேல் அவனை அமர வைத்து ஊரைச் சுற்றி வந்தனர்.

(பன்றி வேட்டைபக்.105)

என்று குறிப்பிட்டுள்ளார். ஜமீன் கட்டுப் பாட்டிலுள்ள நிலங்களில் உள்ள முயல், மான், பன்றி, யானை, புலி போன்ற அனைத்து வகையான உயிரினங்களும் வேட்டையாடப்படுவதற்கு என்ற எண்ணம் ஜமீன் மற்றும் அவர்களை சார்ந்தவர்களிடம் காணப்படுகிறது. பழங்குடி பெண்களும் இவ்வரிசையில் அடங்குகின்றனர். தங்கள் தெய்வங்களான விலங்குகளும் மரங்களும் வேட்டையாடப்படுவதை பளியரின மக்கள் விரும்பாத போதும் ஜமீன்தார் வாக்கிற்கு கட்டுப்பட வேண்டியகட்டாயம் ஏற்படுத்தப்படுகிறது.

**பழங்குடிகளின் வாழ்வியல் சிக்கல்கள்**

விவசாயிகள் நில உரிமை இழந்து அடிமைகளாக காணப்படுகின்றனர். இதனால் அவர்களது வாழ்வியல் சூழலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. முதலாளி வர்க்கங்கள்

குறைந்த ஊதியங்கள் கொடுப்பதால் குழந்தைகள் கல்வி, பொருளாதார முன்னேற்றங்கள் போன்றவை தடைபடுகிறன. மக்களது அறியாமையையும் பொருளாதார அடிப்படை தேவைகளையும் தங்கள் ஆயுதங்களாகக் கொண்டு ஜமீந்தார்கள் பழங்குடிகளை தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்தனர். இதனை ஜான் கென்னடி அவர்கள் தனது நூலில்,

முதலாளிகள் முன்பணம் கொடுப்பதன் வழியாக, தமது காட்டிற்கே தொடர்ந்து வேலைக்கு வர ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இம்மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறி விட்டால் தங்கள் தோட்டங்களுக்கு குறைந்த கூலிக்கு வேலைக்கு வர மாட்டார்கள் என்பதை உணர்ந்து இவர்களை இவ்வாறு கொத்தடிமார்களாக நடத்துகின்றனர். இந்நிலையினை உணராத சில பழங்குடியினர், தங்கள் முதலாளிகளுக்கு உழைத்து, தாங்கள் ஓடாகத் தேய்வதைப் பெருமையானதாக கருதுகின்றனர். (கோடை மலைப் பழங்குடியினர் பக்.55) என்று குறிப்பிட்டுள்ளார். வேட்டை என்பது பழங்குடி மக்களின் அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்யும் வழிமுறையாகும். இதனை ஜமீந்தார்கள் தங்கள் வசம் கொண்டனர். இதனால் பழங்குடி மக்களால் வேட்டை தொழிலில் ஈடுபட இயலவில்லை. அவ்வாறு வேட்டையாடப்படும் விலங்குகளையும் ஜமீன்தார்கள் கைவசம் ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதனால் உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது. வனவிலங்குகளை வரையறையின்றி வேட்டையாடுகின்றனர். இதனால் உணவு சங்கிலியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. காடுகள் சமவெளியாக்கப்படுவதால் சூழலியலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. விலங்குகளால் மரபுசார் வாழ்வியலை மாற்றிக்கொள்ள இயலாததால் தனது உக்கிரத்தை மனிதர்கள் மீதும் அவர்கள் உருவாக்கிய செயற்கை தோட்டங்கள் மீதும் வெளிப்படுத்துகின்றன. இதில் பழங்குடி மக்களும் பாதிக்கப்படுகின்றனர். அதிக கோடை வெயிலின் உக்கிரம் அதிகமான வெப்பம் மற்றும் மழையின்மை போன்றவற்றை ஏற்படுத்துகிறது. இவை விளைச்சலை பாதிக்கின்றது. பன்றி வேட்டை நாவலில் காட்டின் ஊற்றாக ஒரு கிணற்றை லஷ்மி சரவணகுமார் உருவகிக்கிறார். அவ்விடத்தையும் ஜமீன்தார் மற்றும் அவரது குடும்பம் ஆக்கிரமித்துக் கொள்கிறது.

நீங்க எத்தனை நாள் இங்கே கடந்து உருண்டாலும் தண்ணி கொடுக்க மாட்டேன். ஆனதை பாருங்கடா என சொல்லிவிட்டு ஜமீன் வீட்டுக்குள் செல்ல அவரது ஆட்கள் மீண்டும் வாசலை மறைத்து பாதுகாப்பிற்கு நின்றனர்.

(பன்றி வேட்டை பக்133)

இதனால் உயிர்களின் அடிப்படையான தண்ணீருக்கும்வழி இல்லாத நிலை பழங்குடி மக்களுக்கு ஏற்படுகிறது. தங்களது வாழ்வின் அங்கங்களை, வாழிடங்களை, பாரம்பரியங்களை மற்றும் தெய்வங்களை பறி கொடுத்து கொத்தடி மைகளாக வாழும் தன்மைகளைஆசிரியரது நாவல்கள் உணர்த்துகின்றன. அரசு வழங்கும் சலுகை களையும் அதிகார வர்க்கங்கள் ஈர்த்துக் கொள்கின்றனர். இதனால் தொழிலாளர் வர்க்கம் மீண்டும் ஜமீன்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடம் கைகட்டி நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. தனக்கான குறைந்த அளவு கூலியை திரும்ப திரும்ப கேட்டுப் பெற்றுக் கொள்ளும் நிலை பழங்குடி மக்களிடையே காணப்படுகிறது.

### பழங்குடிகளின் எதிர்வினைகள்

இத்தகைய வாழ்வியல் இன்னல்களைத் தாண்டி புதியதொரு வாழ்க்கை முன்னேற்றத்தை பழங்குடி மக்களின் புதிய தலைமுறை விரும்புகிறது. அதிகார வர்க்கம் தங்களிடமிருந்து விடுபட முற்படும் பழங்குடி மக்களது சிந்தனையை வேரோடு அழித்து விடுகிறது.அடக்குமுறையைத் தாண்டி வெளி உலகத்தை நோக்கி பயணிக்க விரும்புபவர்களையும் அதிகார வர்க்கம் அனுமதிப்பதில்லை. இதற்கு

தாங்களே தங்கள் நகைகளை மறைத்து வைத்து திருட்டு பட்டம் கட்டுதல் போன்ற சூழ்ச்சி வலைகளை ஜமீன்தார்கள் உருவாக்குகின்றனர். தங்கள் தெய்வங்களையும் சொந்தங்களையும் விட்டு எந்தவொரு தனிமனிதனும் பிரிந்து செல்ல விரும்புவதில்லை. ஆனால் உயிரின் நீட்சிக்காக எந்த ஒரு உயிரும் முயற்சிக்காமல் இல்லை. இதுவே இயற்கையின் விதி. இவ்விதியை இயற்கை பழங்குடி மக்களுக்கும் விதிக்கிறது. கோடை வெயிலின் தாக்கம் ஊரை பஞ்சத்துக்குள்ளாக்குகிறது. குடிநீரை தன்வசம் மறைத்து வைத்திருக்கும் ஜமீனுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட செய்கிறது. தங்களது முதல் எதிர்ப்பை போராட்டத்தின் மூலம் பழங்குடி மக்கள் வெளிப்படுத்துகின்றனர். அதிகார வர்க்கத்தை எதிர்த்து கேள்விகளை எழுப்புகின்றனர். ஜமீன் உதிர்க்கும் வாக்கியங்கள் தெய்வ வாக்காக பின்பற்றப்பட வேண்டும்என்ற எண்ணத்தை உடைத்து எறிகின்றனர். பழங்குடி மக்களை பகடை களாக பயன்படுத்திய ஜமீன்தார்களை திட்டமிட்டு ஊரை விட்டு துரத்துகின்றனர். அதிகார சக்திகளை அழிக்கும் அளவுக்கு வலிமை பெறுகின்றனர். புதியதொரு சுதந்திர பயணத்தை தொடங்குகின்றனர். இத்தகைய பயணம் பொருளாதார எழுச்சியையும் வருங்கால சந்ததியின் கல்வி நிலையையும் உயர்த்தும் என்பதைலஷ்மி சரவணகுமார் தனது பன்றி வேட்டை நாவலில்,

நீண்ட காலம் வதைத்துக் கொண்டிருந்த துர்க்கனவிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சிகரமான புதிய கனவிற்குள் நுழைந்து விட்டதை போல் பரவசத்தோடு அவர்கள் காட்டில் இருந்து ஊரை நோக்கி திரும்பினார்கள் முதல் முறையாக விடுதலை உணர்வின் மகிழ்ச்சியை உணர்ந்தவர்களுக்கு எவருக்கும் குனியாத உடலோடும் அடிபணியாத மனதோடும் உலகை பார்ப்பது பரவசமாயிருந்தது.

(பன்றி வேட்டை பக்.167)

என்று குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

இன்றைய காலகட்டத்தில் இயந்திரங்கள் சில இடங்களில் இயக்க அதிர்வுகளை ஏற்படுத்தினாலும் இயந்திரத்திற்கு பொத்தான் அழுத்தி உயிர் கொடுக்க மனித சக்தி தேவைப்படுகிறது. அடக்குமுறைகள் இன்றளவும் பல கொத்தடிமைகளுக்கு நிகழ்த்தப்படுகிறது. சுரண்டும் அதிகார வர்க்கங்கள் தொழிலாளியின் உழைப்பை மட்டுமல்லாது அவர்களது நிலங்கள், பெண்கள், அரசின் சலுகைகள் என வாழ்க்கை முன்னேற்றத்திற்கு தேவையான அடிப்படைகள் அனைத்தையும் சுரண்டுகின்றனர். அதற்கானதீர்வு என்பது அடிப்படை வாழ்வியலுக்கான போராட்டங்கள் மட்டுமே. பொருளாதார ஆதிக்கம் மிக்கோர் பெரும்பாலும் உழைப்பதில்லை. வாழ்வில் குறிக்கோள்களும் எதுவுமில்லை. சுவையான உணவுகளுக்கும் மதுக்களுக்கும் அடிமையாகிவாழ்கின்றனர். பழங்குடி மக்கள் ஜமீன்தார்களுக்கு மட்டுமல்லாது அவர்களது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பணிவிடை செய்ய வேண்டியது பணியாட்களின் கடமையாக பணிக்கப்படுகிறது. இத்தகைய அடக்கு முறைகளை எதிர்த்து வெற்றி கண்டால் மட்டுமே தொழிலாளர் வர்க்கங்கள் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க இயலும்.

**துணைநூற்பட்டியல்**

1. இராசமாணிக்கனார் மா. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும். தமிழ் வளர்ச்சித் துறை. சென்னை - 600008
2. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங் குடிகள். அடையாளம் பிரஸ், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310.
3. பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் பிரஸ், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310.
4. லஷ்மி சரவணகுமார், வேட்டை. ஜீரோ டிகிரி பப்ளிகேஷன் 55(7), ஆர்.பிளாக்,

6-வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040.

5. லஷ்மி சரவணகுமார், கானகன். ஜீரோ டிகிரி பப்ளிகேஷன் 55(7), ஆர்.பிளாக், 6-வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040.
6. லஷ்மி சரவணகுமார், பன்றி வேட்டை. ஜீரோ டிகிரி பப்ளிகேஷன் 55(7), ஆர்.பிளாக், 6-வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040.
7. வின்சென்ட் ராஜ். மேட்டுக்குடிகள், NUDROS 40A, ஆலன் விளை, காரங்காடு
8. கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மை சாலை, மையத் தொழில்நுட்ப பயிலக வளாகம், தரமணி, சென்னை.
9. ஜான் கென்னடி, கோடை மலைப் பழங்குடியினர், முகில் வெளியீடு, ஐடியாசு மையம், 26-அ, வாழைத் தோப்பு, சிந்தாமணி ரோடு, மதுரை.
10. ஷெராபின் ஜெ., லஷ்மி சரவணகுமார் புனைகதைகளில் பழங்குடி மக்களின் பண்பாட்டுச் சிறப்புகளும் மாற்றங்களும். தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ். தொகுதி 7, சிறப்பு இதழ் - 2, பிப்ரவரி 2025. E & ISSN: 2581-7140.